**11.02.2026**

**O.S.No. 326/2019**

**வா.சா.3 : தீர்த்தகிரி**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை எதுவும் நீதிமன்றத்தில் இருந்து வந்ததா என்றால் வரவில்லை. அண்ணாமலை தான் என்னை அழைத்து வந்தார். அவர் என்னுடைய நண்பர் என்ற முறையில் நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரியல்ல. நான் காட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஊரில் தான் குடியிருக்கிறேன். காட்டிலும் இருப்பேன். நான் தற்போது காட்டில் குடியிருக்கிறேன். பிரதிவாதிகள் இருக்கும் இடத்தில் இருந்து எனது வீடு சுமார் 1 கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் இல்லை. 1/2 கி.மீட்டர் தர்ன இருக்கும். மேற்படி சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. என்னுடைய சொத்தின் சர்வே எண்ணை பார்த்தால் தான் தெரியும். மேற்படி வழக்கு சொத்து சுமார் 4-1/2 ஏக்கர் இருக்கும். எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்றால் அண்ணாமலை அவருடைய சொத்து என்று சொல்லி வழக்கு போட்டுள்ளார். மேற்படி வழக்கிற்கான சொத்து 1970 க்கு முன்பு இது ஜாகீர் சொத்து ( Before settlement) என்றால் இல்லை.

2) எனக்கு வயது 56 ஆகிறது. நான் பிறப்பதற்கு முன்பாகவே மேற்படி தாவா சொத்து சம்மந்தமாக பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பாக சொத்து குறித்து என்ன நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. மேற்படி சொத்து சம்பந்தமான ஆவணங்களை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். அண்ணாமலை சொல்வதின்பேரில் நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். அண்ணாமலை என்ன சொல்லி கொடுத்தாரோ அதை வைத்து தான் நான் சாட்சி சொல்கிறேன் என்றால் தான். எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்லி தான் தட்டச்சு செய்தார்கள். படித்து சொன்னார்கள் சரியாக இருந்ததால் கையெழுத்து போட்டேன். இதில் நிருபண வாக்குமூலத்தில் உள்ள சர்வே எண்களை அண்ணாமலை தான் சொன்னார்.

3) தாவா சொத்து சம்பந்தமாக அண்ணாமலை தொடர்ந்து விவசாயம் செய்து கொண்டு வருகிறார் என்பதற்கான ஆதாராங்களை நேரில் பார்த்துள்ளேனா என்றால் அவர்கள் விவசாயம் செய்ததை நான் பார்த்துள்ளேன். அண்ணாமலை வெளியூர் சென்றதாக நான் சொல்லி உள்ளேன். அவர் எந்த வருடம் வெளியூருக்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலம் இந்த வருடம் வெளியூர் சென்றதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் அவர் என்னுடைய நண்பர் என்ற முறையில் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் உள்ள விரோதம் காரணமாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.11 17:36:10 +0530

**Subordinate Judge, Attur.**